International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 01 January to March 2023 www.irjtsjournal.org

# நாட்டார் பாடல்களில் கிழக்கிலங்கைத்தமிழரின் வாழ்வியல் அம்சங்கள்

**Life Aspects of East Sri Lankan Tamils in Natar Songs**

திரு : எஸ்.கே. சிவகணேசன், *தலைவர்/ முதுநிலைவிரிவுரையாளர் வரலாற்றுத்துறை, கலைகலாசாரபீடம், கிழக்குபல்கலைககழகம், இலங்கை, வந்தாறுமூலை, செங்கலடி, மட்டக்களப்பு*

செல்வி : சிவகணேசன் சிவதர்சிகா *,BA (Hons), Post Graduate Institute of English, Open University of Sri Lanka.*

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப்பட்ட இனமக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுள் தமிழர்கள் வடகிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழ்ந்துவருகின்றனர். கிழக்கிலங்கைத் தமிழர்களின் வரலாற்றை எடுத்துக்காட்டும் 'மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற வரலாற்று நூல் பல சிறப்புக்களைக் கொண்டது. அந்நூல்குபேரன்காலம் முதல் கிபி. 16 ஆம் நூற்றாண்டு வரையான வரலாற்றை எடுத்துக் காட்டுகின்றது.*

*இலங்கையின் பிராந்திய வரலாற்றைக் கூறும் பல இலக்கியங்கள் காணப்பட்டாலும் இந்நூல் தனித்துவமான பல சிறப்புக்களைக் கொண்டது. இந்நூலினை எழுதியவர், அது எழுதப்பட்ட காலம் தொடர்பாக நூலில் குறிப்புகள் காணப்படவில்லை. கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் வாய்மொழி இலக்கியமாக விருந்து வந்தகதைகளை ஏடுகளாக தொகுக்கும் வழக்கம் ஒல்லாந்தரின் நிர்வாக தேவையாக அமைந்திருந்தது (பத்மநாதன்,2004:90) அவ்வாறு எழுதப்பட்ட நான்கு ஏட்டுச்சுவடிகளை கி.பி. 2005 ஆம் ஆண்டு வித்துவான் கமலநாதன் குழுவினர் அவ்வேடுகளில் குறிப்பிட்டுள்ள பெயரினைக் கொண்டே 'மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற பெயரில் நூலுருவாக்கம் செய்தனர் (கமலநாதன், 2005).*

*கிழக்கிலங்கையின் வரலாற்றுச் செய்திகளை செய்யுள் மற்றும் உரைநடைவடிவில் இந்நூல் காட்டுகின்றது. செய்யுள் நடை நாட்டார் பாடல்கள் வடிவில் காணப்படுகின்றன. அச்செய்யுள் செய்திகள் ஊடாக கிழக்கு தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றுச் செய்திகள் எந்தளவிற்கு வெளிப்படுத் தப்பட்டுள்ளன*

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

*என்பதோடு, நவீன வரலாற்று ஆய்வில் இத்தகைய நாட்டார் இலக்கிய செய்யுள் செய்திகள் பெறும் முக்கியத்துவம் தொடர்பிலும் ஆய்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.*

**கலை சொற்கள்:** *பூர்வசரித்திரம், கிழக்கிலங்கை, வாழ்வியல், வாய்மொழி, சுவடி, நவீனம்*

### அறிமுகம்:

உலகின் மொழிகள் தோன்றி வளர்ச்சியடைவதற்கு முன்பே, மக்கள் மத்தியில் வாய் மொழிப் பாடல்களும், கதைகளும் வழக்கத்துக்கு வந்து விட்டன என்பது மொழி மற்றும் வரலாற்றாய் வாளர்களின் கருத்தாகும். அவ்வகையில் நாட்டுப்புற பாடல்கள் பழமைவாய்ந்த, சிறப்பு மிக்க பாடல்களாகக் காணப்படுகின்றன.

அண்மைக் காலம் முதல் தான் நாட்டார் வழக்கியல் இந்தியா, இலங்கை உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் முக்கிய துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. இத்துறை வரலாற்றுத் துறையோடும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளது. ஆனால் வரலாறு மற்றும் தொல்லியல் தொடர்பான ஆராய்ச்சியாளர்கள் பொதுவாக அத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வுகளை மேற்கொள்வதில்லை என்பது உண்மையாகும். இருந்தபோதிலும், அண்மைக் காலத்தில் வாய்மொழி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று ஆய்வுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பென்ஹிம் (Bernheim) என்ற ஆராய்ச்சியாளர் நாட்டாரியலை, கதைகள், கட்டுக்கதைகள், சம்பவத்துணுக்குகள், பழமொழிகள், வரலாற்றுப் பாடல் என ஐந்து வகையாக பிரித்து வரலாற்று ஆய்வுக்கு பயன் படுத்தியுள்ளார் (Bernheim, 1908, 217). இத்தகைய எல்லாவகைப் பாடுகளும் தமிழர்கள் செறிந்துவாழும் இலங்கையின் வட பிராந்தியத்தில் காணப்படவில்லை. அங்கு கட்டுக் கதைகளும் பழமொழிகளும் பெருவழக்கத்திலுள்ளன. கிழக்குமாகாணத்தில் இந்தவகைப் பாடுகள் காணப்படுகின்றன (இந்திரபாலா,1980,69). ஆபிரிக்க வரலாற்றாய்வாளர்யான் வன்சினா (Jan Vansina) தனது ஆராய்ச்சிக்கு வாய்பாடுகள், செய்யுள், பட்டியல், கதைகள், உரைகள் என ஐந்துவகையாக பிரித்து அந்நாட்டின் வரலாற்றை எழுதியுள்ளார் (vansina,1965). பேராசிரியர் இந்திரபாலாவாய்பாடு, செய்யுள், கதைகள், நாட்டுக் கூத்து என நான்காக வகுத்து எமது வரலாற்று ஆய்வுகளுக்கு பயன் படுத்த முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார் (இந்திரபாலா, 1980, 70). இவ்வகையில் உரை மற்றும் செய்யுள் வடிவில் வரலாற்றுச் செய்திகளைத்தரும் மட்டக்களப்பு பூர்வசரித்திரம் காட்டும் செய்யுள் வடிவிலான, மாகோன் வகுத்த சாதிக்கடமைகளைப் பற்றிய வாழ்வியல் அம்சங்கள் தொடர்பில் இவ்வாய்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு பரப்பு:** மட்டக்களப்பு பூர்வசரித்திர நூலில் 'கலிங்கமகோன் அரணூழியம் வகுத்தகல் வெட்டு' என்ற பகுதியில் கிழக்கிலங்கை மக்கள் சாதியடிப்படையில் கடைப்பிடிக்க வேண்டிய சாதிக்கடமைகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன (கமலநாதன்., 2005 : 53) இங்குயார் இந்த காலிங்கமாகோன் என்ற கேள்வி எழுகின்றது. அண்மைக் காலம் வரை பலரும் பலவிதமான விளங்கங்களைக் கொடுத் திருந்தனர். திருகோணமலை கோமரசன் கடவல என்ற இடத்தில் பேராசிரியர் புஸ்பரட்ணம் கண்டு பிடித்தகல் வெட்டு செய்திகளின் அடிப்படையில், கலிங்கமாகோன் சோழ மன்னனின் பிரிதி நிதி அல்லது தளபதி ஸ்ரீகுளோத்துங்க சோழ காலிங்கராயன் என்பரால் நியமிக்கப்பட்ட பொலனறுவை இராசதானியின் ஆட்சியாளன் என்பது வெளிப்படுத்தப் பட்டுள்ளது (இந்திரபாலா., 2021: 11.27). கிபி. 13 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் மட்டக்களப்பு பிரதேசத்தில் சாதிக் கடமைகளும் சைவமும் செல்வாக் கிழந்த சந்தர்ப்பத்தில் அதனை மீளக்கட்டியெழுப்பு வதற்கு தலைமை தாங்கிய ஒருவராக, மன்னன் மாகோன் மட்டக்களப்பு பூர்வசரித்திர நூலில் காட்டப் பட்டுள்ளான். ஆய்வின் சுருக்கத்தைக் கவனத்தில் கொண்டு மகோன் பற்றிய மேலதிக ஆய்வுச் செய்திகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது.

நாட்டார் இலக்கிய மரபின் முக்கிய அம் சமான செய்யுள் (பாடல்) வடிவில்வரலாற்று செய்திகள் சாதி மற்றும் அவர்களது கடமைகள் வகுக்கப் பட்ட வாழ்வியல் செய்திகள் அந்நூலில் காட்டப்பட்டுள்ளன '.......இகழ்ந்தவர்களனை வரையும் மகோன்கண்டு, யிருவிழியை யெடுத்தடித்துயிடுக்கண் செய்து......' என்றுதொடங்கும்41 செய்யுள் வரிகள் அச்செய்திகளை எடுத்துக்காட்டுகின்றன (கமலநாதன்.,2005 : 52-54). இச்செய்யுள் வரிகள் காட்டும் வரலாற்றுச் செய்திகளை பார்போம். இங்கு காலிங்கமாகோனால் வகுக்கப்பட்ட கண்டன் குடி, சருகுபில்லிகுடி, கட்டப்பத்தன்குடி, கவுத்தன்குடி, அத்தியாயன்குடி, பொன்னாச்சிகுடி, வயித்திகுடி எனப்பட்ட ஏழுகுடிகள் பற்றிய வாழ்வியல் செய்திகள் கூறப்பட்டுள்ளன. இக்குடிகள் மட்டக்களப்பு – திருக்கோவில் பிராந்தியத்தில் காணப்படுகின்றன. அக்குடிகள் தற்காலத்தில் கண்டங்குடி, சலுவிலிகுடி, கட்டப்பத்தங்குடி (சங்கரப்பத்தாங்குடி, கவுத்தங்குடி, அத்தியாகுடி, பொன்னாச்சிகுடி, வச்சினாகுடி என வழைக்கப் பட்டுவருகின்றன (தங்கேஸ்வரி., 2005:76).

இவ்வேழுகுடிகளும் சிவனுக்கு ஆற்ற வேண்டிய தொண்டுகள் தொடர்பில் செய்யுளில் விபரிக்கப்பட்டுள்ளது. அதாவது சிவபூசைக்கு விளக்கேற்றல், பூவெடுத்தல், தூசகற்றல், சாணமிடல், மாலைகட்டல், மேளமீட்டல், சந்தனமரைத்தல், நெல்லுக்குத்துதல், சிவிகையேந்தல், தானிகட்டல், அமுதுவைத்தல், நீர்வார்த்தல்

முதலான அகத்தொண்டுகள் பட்டியலிடப் பட்டுள்ளன (கமலநாதன்.,2005:53. குணபாலசிங்கம்,1993:134).

## முடிவுரை:

எனவே மட்டக்களப்பு பூர்வசரித்திர நூலில் வருகின்ற நாட்டார் இலக்கிய வடிவிலான செய்யுள் வரிகள் பல வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுததுகின்றது.

1. பொலனறுவை மன்னன் காலிங்கமகோன் கிழக்கிலங்கையில் செலுத்திய மேலாண்மை வெளிப்படுத்தப் பட்டுள்ளது. குறிப்பாகதென் கிழக்கிலங்கையில் மீண்டும் கலிங்கவம் சத்தவர் ஆட்சியை நிலை நிறுத்திய வரலாற்று செய்தி காட்டப் பட்டுள்ளது.

2. சைவத்தின் வீழ்ச்சிக்கு காரணமான நாமதாரிகளுக் கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் விபரிக்கப்பட்டுள்ளன.

3. கி.பி. 13 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் சீர்குலைக் கப்பட்டிருந்த சைவசமயத்தை மீளக்கட்யெழுப்பியமை வெளிப் படுத்தப் பட்டுள்ளது. இன்று வரை நிலைத் திருக்கும் கிலக்கிலங்கைக்கே உரித்தான வீரசைவத்தின் மீள்ளெழுச்சி வரலாறு காட்டப் பட்டுள்ளது.

4. சமூகவகுப்புகள் வகுக்கப்பட்டு, அவர்களின் சிவன் கோவில் கடமைகள் வகுக்கப் பட்ட செய்திகள் காட்டப்பட்டுள்ளன. மாகோனால் வகுக்கப்பட்ட சாதியில் மற்றும் கோவில்கடமைகள் இன்றும் திருக்கோவில் பகுதியில் நடை முறையுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்கால நவீன வரலாற்று ஆய்வில் நாட்டார் இலக்கியங்கள் முக்கிய ஆதாரமாகபயன் படுத்தப்படும் முறைவளர்ச்சி பெற்றுள்ளது. அவ்விலக்கியத்தின் ஒர் வடிவமான செய்யுள் வடிவம் வெளிப்படுத்து பல வரலாற்றுச் செய்திகள் மட்டக்களப்பு பூர்வசரித்திரம் என்ற நூலில் காணப்படுகின்றன. ஆய்வின் சுருக்கம் கருதி, அந்நூலில் காட்டப்பட்டுள்ள சாதியமைப்பும் அச்சாதிகளுக்கு அளிக்கப்பட்ட சிவன்கோவில் கடமைகள் தொடர்பில் மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## உசாத்துணைகள்:

[1] இந்திரபாலா.கா., 1980, 'நாட்டார்வழக்கியலும்இலங்கைத்தமிழர்வரலாறும்', சிவத்தம்பி.கா., (பதிப்பு), இலங்கைத்தமிழ்நாட்டார்வழக்கியல், யாழ்ப்பாணபல்கலைக்கழகம்.

[2] இந்திரபாலா.கா., 2021.11.27, 'கலிங்கமாகோன்பற்றியமுக்கியகல்வெட்டு, 'தமிழ்மீரர், கொழும்பு.

[3] கமலநாதன்.சி.,2005, மட்டக்களப்புபூர்வசரித்திரம், மட்டக்களப்பு

[4] தங்கேஸ்வரி.க.,2005, தமிழ் மன்னன் மாகோனின்மகத்தான பணி, மணிமேகலைப் பதிப்பகம், சென்னை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR

[5] பத்மநாதன்.சி.,2004, ஈழத்துஇலக்கியமும்வரலாறும், குமரன்பதிப்பகம், கொழும்பு.

[6] Vansina.J.,1965,Oraltradition,London.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*